10/=

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 173 திங்கட்கிழமை நவம்பர் 13 2017 ethirolimedia@gmail.com

## கருணாவின் சகாவை கடத்த முயற்சி

வவுனியாவில் பரபரப்பு



வவுனியா, நவ.13

கருணா அம்மான் எனப்படும் விநாயக மூரத்தி முரளிதரனின் கட்சியான ஐக்கிய சுதந் திர முன்னணியின் வட மாகாண அமைப்பா ளரான பொன்னுத்துரை அரவிந்தனை துப் பாக்கி முனையில் கடத்தும் முயற்சி நேற்றுத் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

வவுனியாவில் அமைந்துள்ள தனது வீட் டுக்கு முன்பாகச் சந்தேகத்துக்கிடமான வாகனங் களின் நடமாட்டத்தை அவதானித்த அரவிந் தன் சுதாகரித்துக் கொண்டதுடன், தனது வாகனத்தில் நண்பரை அனுப்பி விட்டு தான் பிறிதொரு வாகனத்தில் பின்னால் சென் றுள்ளார்.

06

## மாவீரர் நாளுக்காக கிளிநொச்சி ரெடி!



கிளிநொச்சி, நவ.13

நவம்பர் 27 ஆம் திகதி அனுஷ்டிக்கப் படவுள்ள மாவீரர் நாளையொட்டி, கிளி நொச்சியில் உள்ள மூன்று துயி லுமில்லங்களிலும் நினைவேந் தலுக்கான ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.

குறிப்பாக கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயி லுமில்லத்தில் மக்கள், பொது அமைப்புக்கள் பல்கலைக்கழக மாண வர்கள், அரசியற் கட்சி

06



## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி + ஈ.பி.ஆர்.எல்.எவ். + பொது அமைப்புக்கள் = புதிய கூட்டணி

பேரவையின் ஆசியுடன் விரைவில்

யாழ்ப்பாணம், நவ. 13

"தமிழ் மக்கள் பேரவையின் பங்களிப்புடன் புதிய கூட்டணி ஒன்று எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்க வேண்டும். இந்தப் புதிய கூட்டணி தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை தமிழ் மக்கள் பேரவை ஒரு சில தினங்களில் வெளியிடும். அதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் பொது

06

## ஒற்றையாட்சிக்கு இணங்கவில்லை

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஜனவரியில்

உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளல்

பட்ஜெட்டில் யோசனைகள் சேர்ப்பு



காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டமை நாமே எதிர் பாராதது. வரும் ஜனவரியில் அதற்கான வேலைத் திட்டங்கள் தொடங்கும். வரவு - செலவுத் திட் டத்தில் எமது யோசனைகளும் உள்வாங்கப்பட் டது. இது நல்லிணக்கத்திற்கான அறிகுறி.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த்

06

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அதிகாரபூர்வமாக விலகவில்லை

தமிழ்த் தேசியக் கூட் டமைப்பில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். உத்தி யோகபூர்வமாக விலக வில்லை எனத் தெரிவித் திருக்கிறார் இரா. சம்பந்தன்.

06

## கூட்டமைப்புடன் சேர்ந்து பயணிப்பதே நல்லது!

முதலமைச்சரின் கருத்து இது



யாழ்ப்பாணம், நவ.13

"குறைபாடுள்ள அரசியல் தீர்வை தமிழ் தேசியக் கூட் டமைப்பின் தலைமை ஏற்றுக் கொண்டுவிட்டால் நாம் என் றென்றைக்கும் அதனை மாற்றி விடமுடியாது. அரசு தரு வதனைத் தரட்டும்.

06



## ரயிலுடன் மோதி குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலு டன் மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

06

## வடக்கு-கிழக்கில் 15,000 ரூபாவில் வீடா?



கொழும்பு, நவ.13

"2018ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின் ஊடாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தலையில் அரசாங்கம் மிளகாய் அரைத் துள்ளது" என முன்னாள் பிரதி அமைச்சரும், ஜனநாயக

06

## ஆதாரமற்ற செய்தி பொம்மர்ஸ் மறுப்பு!

யாழ்ப்பாணம், நவ.13

நேற்றுமுன்தினம் எதிரொலியில் வெளி யான 'பொம்மர்ஸூக்கு சிவப்பு அட்டை" என்ற செய்திக்கு தமது மறுப்பை யும், கண்டனத்தையும் வதிரி பொம் மர்ஸ் விளையாட்டுக் கழகம்

06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய ஆளுமையுள்ள பிரதிநிதிகளுக்கான தேடல்

## ஆரம்பித்தது தமிழ் மக்கள் பேரவை

யாழ்ப்பாணம், நவ.13

"தமிழ்த் தேசியப் பற்றுறுதியும் ஆளுமையுமுள்ள மக்கள் பிரதிநிதிகளை உருவாக்கவே, வழிமுறைகளையும் கலந்துரையாடல்களையும் தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்துள்ளது"

இவ்வாறு பேரவையின் ஊடக இணைப்பாளர் எனக் குறிப்பிட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்ச் சமூகத்தின் அரசியல், நிர்வாக அடிப்படைக் கட்டுமானங்களைப் பலப்படுத்துவதன் மூலம் தமிழ்த் தேசியப் பற்றுறுதி கொண்ட, திறன்மிக்க ஆளுமைகளை மக்கள் பிரதிநிதிகளாக உருவாக்குவதற்கான வழிமுறைகளையும் கலந்துரையாடல்களையும் தமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்துள்ளது.



இன்றைய சூழலில் மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய அர்ப்பணிப்பும் சேவை மனப்பான்மையும் கொண்ட இளைய சமுதாயத்தின் பங்கேற்புடன் கூடிய அரசியற்களத்தின் தேவை பெரிதும் உணரப்படுகின்றது - அது காலத்தின் தேவையாகவும் உள்ளது.

நாளைய தலைவர்களாக மிளிரக் கூடிய எமது இளைய சமுதாயம், சமூகத்தோடு இணைந்து செயற்படவும் சமூகத்தின் அடிப்படைக் கட்டுமானங்களில் தேர்ச்சி பெறவும், வெளிப்படைத்தன்மை கொண்ட நிர்வாக அமைப்புக்களைக் கட்டியமைக்கவும் தமக்கான ஓர் வாய்ப்பைத் தேடிக் காத்திருக்கிறது.

நிர்வாக அனுபவமும் வினைத்திறன் மிக்க ஆளுமைப்பண்பும் பொருந்திய குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையிலான ஓய்வுபெற்ற அரச மற்றும் தனியார்துறை அதிகாரிகள், ஊழியர்கள் தமது அனுபவ அறிவை மக்களுக்கான சேவையின்பால் தொடரவும் ஆர்வமுள்ளவர்களாக இருப்பது அவதானிக்கப்பட்டு வருகின்றது.

தத்தமது பிரதேசங்களில் இருக்கக்கூடிய முன்னேற்றகரமான வாய்ப்புக்களையும் அவற்றை சமூகப்பயன்கொண்டவையாக எய்துவதில் இருக்கக்கூடிய சவால்களையும் தமது வாழ்வில் அல்லும் பகலும் சந்தித்து வரும் மக்கள் சேவையாளர்கள் பலர், இயலுமான வகைகளில் தமது திறன்களை ஆக்க பூர்வமாக மடைதிறந்துவிட விருப்புக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

ஆண்களுக்கு நிகராக, பல சமயங்களில் மேனிலையில் நிர்வாகத்திறன் கொண்டும், அன்பும் அரவணைப்பும் மிக்க தமது கரிசனைகளைத் தத்தமது குடும்பங்கள் கடந்தும் தாம் வாழும் சமூகத்தின் மீதும் அக்கறையுடன் பகிர்ந்த கொள்ளும் பெண்கள் எம் சமூகத்தின் முன்னோடிகளாக, முன்னுதாரணங்களாக, இருந்து வருகின்றனர்.

வாழ்வியல் விழுமியங்களும் முன்னுதாரண வாழ்வும் நிறைந்த பெருந்தகைகளை நாம் எமது ஊர்களில் இன்றும் காண்கிறோம்.

இனத்தின் விடுதலையின் பால் நாட்டம் கொண்டு, விசுவாசமும் நேர்மையும் ஒழுக்கமும் மிக்க உதாரண மனிதர்களாகத் திகழும், மக்களுக்காகத் தம்மையே அர்ப்பணித்துப் போராடிய முன்னாள் போராளிகள் பலரும் எம்முள் உள்ளனர்.

ஒய்வறியா உடலுழைப்பும் நேர்மைத்திறனும் நிரம்பப்பெற்ற தொழிலாளர்கள் தமது பயனுறு சக்தியை தாம்சார்ந்த சமூகங்கள் பயன்பெறவும் மானுட விடுதலையின்பால் தமது உழைப்பைப் பகிர்ந்து கொள்ளவும் வேகங் கொண்டுள்ளனர்.

இத்தகைய ஒட்டுமொத்த சமூகப் பங்களிப்பை ஆக்க பூர்வமான, ஆரோக்கியமான வழியில் எடுத்துச்செல்லும் ஓர் வாய்ப்பாக, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைப் பயன்படுத்திக் கொள்வது தமிழ்ப் பிரதேசங்களில் பொதுமக்களின் பங்கேற்புக் கொண்ட ஜனநாயகக் கட்டமைப்புக்களை மக்கள் தளத்திலிருந்து கட்டியெழுப்புவதற்கு உதவும் என தமிழர் தரப்பின் பல தளங்களிலிருந்தும் எழுந்த கோரிக்கையை தமிழ் மக்கள் பேரவை கவனத்தில் கொள்கிறது.

உயரிய நோக்கங்கள் கொண்ட அரசியல் போராட்ட வழிமுறையில், சமூகத்தின் அடித்தள அமைப்பிலிருந்து அதற்கான பயிற்சிக் களங்களைத் திறப்பதும், அரசியலிலும் நிர்வாகக் கட்டமைப்புக்களிலும் பொதுமக்களின் பங்கேற்பை அதிகரிக்க கூடிய வழிமுறைகளைப் பயன்படுத்திக் கொள்வதும், காலத்தின் தேவை அறிந்த உத்தியென்ற புத்திஜீவிகளின் ஆலோசனையை தமிழ் மக்கள் பேரவை ஏற்றுக் கொள்கின்றது.

பகிரங்கத்தன்மையான, திறந்த, திறன் மிக்க அதிகாரப் பொறிமுறையை அடித்தள அமைப்புக்களில் உறுதிப்படுத்திக் கொள்ளவும், ஊழலற்ற, அதிகாரப் போட்டிகளற்ற, மக்கள் சேவை என்ற மகுடத்திற்குள் நின்று நிலைபெறக்கூடிய நிர்வாகங்களை ஊரக அளவில் உருவாக்கிக் கொள்ளவுமான ஒரு வாய்ப்பை மிகச் சரியான தெரிவுகளின் அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தின் மூலம் பெறமுடியுமானால், அதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கும், ஒத்த சிந்தனைகளுடன் பயணிப்பவர்களுடன் அதற்காக் கைகோர்த்துக் கொள்ளவும் தமிழ் மக்கள் பேரவை தயாராக உள்ளது.

இத்தகைய முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல்களும் கருத்துப் பகிர்வுகளும் தமிழ் மக்கள் பேரவையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றுள்ளது. (அ)

# உள்ளூராட்சி சபைகளில் 2000 பெண்கள்

கொழும்பு,நவ.13

உள்ளூராட்சி சபைகளுக்கு இனி வரும் காலங்களில் 2000 க்கும் அதிகமான பெண் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புதிதாக அறிமுகப்படுத்தப்படும், கலப்புத் தேர்தல் முறையின் கீழ், 25 வீதமான பெண்கள் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

இம்முறை, உள்ளூராட்சி சபைகளுக்கு 8 ஆயிரத்து 356 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

நேரடியான வட்டார முறைத் தெரிவில், பெண்களின் பிரதிநிதித்துவம் குறைந்து போனாலும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ், 25 வீதப் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும்.

இதன் மூலம், இம்முறை 2000 க்கும் அதிகமான பெண் பிரதிநிதிகள் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

கடந்த முறை உள்ளூராட்சி சபைகளில் 82 பெண் பிரதிநிதிகளே இடம் பெற்றிருந்தனர்.

அதேவேளை, இம்முறை வேட்பாளர் பட்டியலில் இடம்பெற வேண்டிய பெண்களுக்கான குறைந்தபட்ச ஒதுக்கீடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, வட்டார முறை வேட்பு மனுவில் 25 வீதமும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ வேட்புமனுவில் 50 வீதமும் பெண் வேட்பாளர்கள் இடம்பெற்றிருக்க வேண்டும்.

மேற்குறித்த வகையில் தேவையான பெண் வேட்பாளர்களை உள்ளடக்காத வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது-என்றுள்ளது. (அ)

# குடிகாரக் கணவனை அடித்துக் கொன்ற மனைவி

கொழும்பு, நவ.13

குடி போதையில் மனைவியைத் தாக்க முயற்சித்த நபர் ஒருவர், மனைவியின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை 3.45 மணியளவில் நடந்துள்ளது. வென்னப்புவ பாத்திமா மாவத்தையில் வசித்து வந்த 49 வயதான மாசேவ்வகே சுஜி சமிந்த துஷார என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலைச் சம்பவம் தொடர்பாக உயிரிழந்தவரின் 48 வயதான மனைவியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். தினமும் குடி போதையில் வரும் கணவன் தன்னை அடிப்பதாகவும் சம்பவம் நடந்த நேரத்தில் கணவன் தன்னைப் பொல்லால் தாக்க முயற்சித்ததாகவும் அப்போது அந்தப் பொல்லைப் பறித்து தான் கணவனை தாக்கியதாகவும் அந்தப் பெண் பொலிஸாரிடம் கூறியுள்ளார். (அ)

# ஆலயக் கேணிக்குள் கழிவு ஓயில் வீச்சு

## தொல்புரத்தில் சம்பவம்



யாழ்ப்பாணம், நவ.13

இளைஞர்கள் நீந்திக் கொண்டிருந்த கோயில் கேணிக்குள் பரிபாலனசபை உறுப்பினர் ஒருவர் கழிவு ஓயிலை ஊற்றியதால், தொல்புரம் வழக்கம்பரை அம்மன் கோயிலடியில் பதற்றம் ஏற்பட்டது.

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயக் கேணியில், இளைஞர்கள் சிலர் கடந்த சில நாட்களாக நீந்தியுள்ளனர். எனினும் குறித்த கேணியில் நீந்தக் கூடாது என்று பரிபாலனசபையினர் கண்டித்துள்ளனர்.

இந்தநிலையில், நேற்று மாலை 4.30 மணியளவில் இளைஞர்கள் நீந்திக் கொண்டிருந்த போது, பரிபாலன சபை உறுப்பினர் ஒருவர் கேணியில் இருந்து வெளியேறுமாறு கோரிய போது, அவருக்கும் இளைஞர்களுக்குமிடையே முரண்பாடு தோன்றியுள்ளது. இதனால் ஒரு கட்டத்தில் கழிவு ஓயிலைக் கோயில் கேணியில் பரிபாலனசபை உறுப்பினர் ஊற்றியதால், கைகலப்பு ஏற்படுமளவுக்கு நிலைமை மாறியது.

"நாங்கள் ஒவ்வொரு வருடமும் நீந்தும் கேணியில் திடீரெனப் புதிய கட்டுப்பாடுகள் போடுகின்றனர். நாங்கள் கோயில் கேணியில் குளிப்பதால் அதன் புனிதம் கெட்டுவிடுமென்று எம்மை அப்புறப்படுத்தும் நிர்வாகத்தினர், புனிதமான கோயில் கேணிக்குள் கழிவு ஓயில் ஊற்றுவது சரியா?" என நீந்திக் கொண்டிருந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

"6 வருடங்களுக்கு முன்னர் புனரமைக்கப்பட்ட கேணியைச் சுத்தமாகப் பேணும் வகையில் சுற்றிவர வேலியமைத்து, பூட்டி வைத்திருந்தோம். ஆனால் அதையும் மீறிச் சிலர் பூட்டை உடைத்து, கேணிக்குள் நீந்தினர். இதனை இரு நாட்கள் எச்சரித்தும் அவர்கள் கேட்கவில்லை. இந்த நிலையில் இன்று அவர்களைத் தடுக்கச் சென்ற பரிபாலனசபை உறுப்பினருடன் அவர்கள் தர்க்கப்பட்டதால், இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம். நான் கொழும்பில் நிற்பதால் அங்கு என்ன நடந்தது என்பதை உறுதியாகச் சொல்ல முடியாதிருக்கிறது" என ஆலயத்தின் பரிபாலன சபைச் செயலாளர் 'எதிரொலிக்கு' தெரிவித்தார். (அ)

# வாகன விபத்தில் மாணவன் சாவு

கொழும்பு,நவ.13

வெலிக்கடை - மாதின்னாகொடை வீதியில், கெப் வண்டி வீதியை விட்டு விலகி கட்டடத்தில் மோதியதால் கொழும்பில் உள்ள பிரபல பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார். மேலும் 8 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். சம்பவத்தில் படுகாயமடைந்த மாணவர்கள் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli
திங்கள், 13 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

## இனி தனிக் கச்சேரி இல்லை

கீரைக்கடைக்கு எதிர்க்கடை வருவது உறுதியாகிவிட்டது. இவ்வளவு நாளும் தனி ஆவர்த்தனம் செய்து கொண்டிருந்ததால், தேசியத்தின் மீது பற்றுக்கொண்ட பெரும்பாலானோர் வேறு தெரிவுகள் இல்லாததால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக்கே வாக்களித்து வந்தனர். கூட்டமைப்புக்கு மாற்றாக தமிழ்த் தேசிய முன்னணி ஓரளவு மேலெழ முயற்சித்த போதும், தேர்தல் நேரத்தில் மக்கள் வீட்டுக்கே வாக்களித்ததால், அந்த எழுகை உரிய இலக்கை அடையமுடியவில்லை. தமிழ்த் தேசிய முன்னணி தேர்தலில் சந்தித்த தோல்விகளும், பெரும்பாலான மக்களின் வாக்குகள் தமக்கே கிடைத்த தைரியத்திலும், எந்த மக்களின் ஆணையைப் பெற்று கூட்டமைப்பு வெற்றி பெற்றதோ, அதே மக்களின் அபிலாஷைகளுக்கு மாறாக நடக்கத் தொடங்கியது.

அத்தோடு இளைய தலைமுறையினருக்கும், பெண்களுக்கும் கூட்டமைப்பில் இடம் கிடைப்பதென்பது பகல் கனவான ஒன்றகாவே இருந்தது.

இப்படிப்பட்ட நிலையில் தான் தமிழ் மக்கள் பேரவை தோற்றம் பெற்றது. கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வடமாகாண முதலமைச்சரான சி.வி. விக்னேஸ்வரனின் இணைத்தலைமையில் உருவான தமிழ் மக்கள் பேரவை பல எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியது.

மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு தமிழ் மக்களிடையே –ஜனவசியம் மிக்க– செல்வாக்குப் பெற்ற தலைவராக முதலமைச்சர் எழுச்சி பெற்றிருந்தார். அந்த எழுச்சியின் விஸ்வரூபம், அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் கொண்டுவர முயன்றபோது அனைவரும் நன்கறிந்து கொள்ள முடிந்தது. அப்படி ஒரு நட்சத்திர அந்தஸ்துள்ள அரசியல்வாதியை, இணைத்தலைமையாகக் கொண்டதாலும், தமிழ்த் தேசியத்தின் மீதும், மக்கள் மீது பற்றுக்கொண்ட புத்திஜீவிகளை உள்ளடக்கியதாலும், கூட்டமைப்புக்கு மிகப்பெரும் அழுத்த சக்தியாக பேரவை நோக்கப்பட்டது.

ஆனால் "பேரவை என்பது ஒருபோதும் அரசியல் சக்தியாகவோ, அல்லது தேர்தலில் போட்டியிடும் கட்சியாகவோ மாறாது. அது எப்போதும் மக்கள் இயக்கமாகவே இருக்கும்" என்றே அதன் இணைத் தலைவரான வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அன்றும் சொன்னார் நேற்றும் சொல்லியிருக்கிறார். இருப்பினும், கூட்டமைப்புக்கு மாற்றான இன்னொரு கூட்டணியை பேரவையே முன்னின்று அமைத்துள்ளது. ஏறக்குறைய புதிய கூட்டணியின் பெயர், அதில் அங்கம் வகிக்கப் போகும் கட்சிகள், பொது அமைப்புக்கள் என்பன பற்றியெல்லாம் இறுதி முடிவு கூட எடுக்கப்பட்டுவிட்டது. நேற்று நடைபெற்ற பேரவைக் கூட்டத்தின் இறுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், ஈ.பி.ஆர்.எல்.எப்பும் புதிய கூட்டணியில் இணையப் போவதை அந்தக் கட்சிகளின் தலைவர்களான கஜேந்திரகுமாரும், சுரேஷ் பிரேமச்சந்திரனும் தங்கள் வாயாலேயே உறுதிப்படுத்தி விட்டனர். இதைத் தவிர தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் ஒரு சிலரும் இந்தக் கூட்டுக்குள் உள்வாங்கப்படவுள்ளனர். குறிப்பாக தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியைச் சேர்ந்த முக்கிய தலைகள் இந்தப் புதிய கூட்டணியில் இணையவுள்ளன.

இப்படி ஓரளவு பலம் மிக்க, இளைஞர்களின் ஆதரவை அதிகம் பெற்ற ஒரு புதிய கூட்டணி தமக்கெதிராகக் களமிறங்கும் என்பதைத் தமிழரசுக் கட்சி எதிர்பார்க்கவில்லை. "கூட்டமைப்பில் உள்ளவர்கள் அதிலிருந்து வெளியேறினால் அரசியலில் 'அட்ரஸ்' தெரியாமல் போய்விடுவார்கள். எனவே என்ன செய்தாலும் நம்மோடு தான் ஒட்டிக் கொண்டிருப்பார்கள்" என்ற எண்ணத்திலேயே தமிழரசுக் கட்சி இருந்தது. ஆனால் இப்போது உருவாகியுள்ள புதிய கூட்டணி, உள்ளூராட்சித் தேர்தலில் எதிர்பாராத வெற்றியையோ, அல்லது கூட்டமைப்புக்குச் சவால் விடுக்கக் கூடிய எண்ணிக்கையிலான ஆசனங்களையோ கைப்பற்றிவிட்டால், அது பின்னாட்களில் தமிழரசுக் கட்சிக்கு ஆப்பாகிவிடும்.

புதிய கூட்டணி பற்றிய அறிவிப்பு வந்த உடனேயே, "கூட்டமைப்பில் இருந்து எவரும் பிரிவதை நாம் விரும்பவில்லை. தமிழரசுக் கட்சி விட்டுக் கொடுப்புடனேயே செயற்படும்" என்று தடாலடியாக முருங்கை மரத்தில் இருந்து இறங்கியிருக்கிறது. ஒருவேளை புதிய கூட்டணி கூட, காலப்போக்கில் கூட்டமைப்பு போலவே செயற்படவும் கூடும். ஆனால் தனிக் கடை இருப்பதை விடவும் பலமான எதிர்க்கடை ஒன்று இப்போதைக்குத் தமிழர்களுக்கு அவசியமும், அனுகூலமுமானதும் தான்.

எப்படியோ இந்தமுறைத் தேர்தலில் தனிக்கச்சேரி இருக்கப்போவதில்லை. இருமுனைச் சமர் நடக்கப்போகிறது. இனி மக்கள் தீர்மானித்துக் கொள்வார்கள் எந்தக் கச்சேரியை ஆதரிப்பதென. அந்த ஆதரிப்பு ஒரு வரலாற்று மாற்றத்தை நிகழ்த்தும் என்பது மட்டும் திண்ணம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

### அரசியல் கைதிகளுக்காக

# பல்கலை மாணவர்கள் கவனயீர்ப்புப் பேரணி நாளை

யாழ்ப்பாணம், நவ.13

தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக யாழ் .பல்கலைக்கழக மாணவர்களால் மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

அனுராதபுரம் சிறையில் உணவு தவிர்ப்பில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்றக் கோரியும், ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்த வலியுறுத்தியும் ,யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் அண்மைக்காலமாக தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ் விடயம் தொடர்பில், அதிகாரத்தில் உள்ள பலராலும் பல வாக்குறுதிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு அவை பொய்த்துப்போன நிலையில் மாணவர்கள் ஜனநாயக ரீதியில் இவ் விடயத்தை சர்வதேச மட்டத்தில் எடுத்துச்செல்லும் முயற்சியிலும் அரசுக்கு தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுக்கும் வகையிலும், அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றும் வரையில் தமது போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல தீர்மானித்துள்ளனர்.

அந்த வகையில் நாளை இந்த மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி யாழ். பல்கலைக்கழக முன்றலில் இருந்து காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் அனைத்து மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள், பொது அமைப்புக்கள், அனைவரும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு யாழ். பல்கலை மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கவனயீர்ப்புத் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ளது. (அ)

# கூட்டமைப்பாகவே தேர்தலில் போட்டி

### சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா, நவ.13

கூட்டமைப்பு ஒற்றுமையாக செயற்படுவதற்காக இலங்கை தமிழரசுக் கட்சி பல தியாகங்களை செய்யத் தயாராகவுள்ளது. இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், புதிய அரசியலமைப்பு திருத்தம் குறித்தும், தமிழ் மக்களின் நலன் சார்ந்து இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்தும் விரிவாகப் பேசப்பட்டது என தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

"தமிழ் மக்களின் எதிர்காலத்திற்காகவும் கூட்டமைப்பின் ஒற்றுமைக்காகவும் தமிழரசுக் கட்சி பல தியாகங்களை செய்யத் தயாராகவுள்ளது. ஒற்றுமைக்காக மௌனமாக இருப்பதால்தான் தமிழரசுக் கட்சி குறித்து விமர்சனங்களும் பல கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன.

இடைக்கால வரைபை மட்டும் வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றாமல் அரசியல் யாப்பின் முழுவடிவம் வந்த பின்னரே அது குறித்து தெளிவான விளக்கத்தை வழங்குவோம். வரும் தேர்தலை பங்காளிக் கட்சிகளுடன் எதிர்கொள்வோம்" -என்றும் அவர் கூறினார். (ச)

## தேசியப்பட்டியல் எம்.பி அருந்தவபாலனுக்கு?



யாழ்ப்பாணம், நவ.13

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான துரைரட்ணசிங்கம் பதவி விலகி, அவரது இடத்துக்கு அந்தக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் வி.அருந்தவபாலனை நியமிக்க நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தெரியவருகின்றது.

உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறவுள்ளநிலையில் தென்மராட்சித் தொகுதிக்கும் நாடாளுமன்ற உறுப்பினரை நியமித்து அந்தத் தொகுதி மக்களின் விருப்பை நிறைவேற்ற வேண்டுமென கட்சியின் உயர் மட்டத்துக்கு எடுத்துக் கூறப்பட்டதையடுத்தே இம்முடிவு எடுக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவே அடுத்த கட்டத்தைத் தீர்மானிக்கும்

யாழ்ப்பாணம், நவ.13

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் எடுக்கும் முடிவே இனப்பிரச்சினைக்கான தீர்வினை நோக்கிய அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதாக அமையும்" என்று பிரபல சமூக அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

சமூக விஞ்ஞான ஆய்வு மையம், இலங்கை ஆசிரியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஆகிய ஆறு பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து நடத்திய "இடைக்கால அறிக்கையும் தமிழ் மக்களும்" எனும் கருத்தாடல் அரங்கு யாழ். நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இடைக்கால வரைபைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? இல்லையா? என்ற அபிப்பிராயத்தை இந்தத் தேர்தல் மூலம் தெரிவிக்க வேண்டி வரும். எனவே, இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்கு ஒரு ஒத்திகையாகவே அமையும். அந்த ஒத்திகை எதிர்காலத்தில் இடம்பெறப் போகும் பல்வேறு மாற்றங்களுக்கும் கட்டியமாகவும் அமையும் .

அடுத்த வருடம் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என அறிவித்து விட்டார்கள். அந்தத் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்பது தெரியாது. ஆனால், ஒருவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்றால் அதுவொரு மிகப் பெரிய சவாலான தேர்தலாக அமையும் என்றும் கூறியுள்ளார்.சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உடைக்குமொரு தேர்தலாக மாத்திரம் இந்தத் தேர்தல் அமையப் போவதில்லை. அவ்வாறானதொரு துணிச்சலுடன் தான் அரசாங்கம் தேர்தலை நோக்கி நகருகிறது. முன்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் கண்டு அரசாங்கத் தரப்பினர் அச்சப்பட்டார்கள். மகிந்த- மைத்திரியிடையேயான பிளவு மேலும் அதிகரிக்கும் போது அது ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதகமாக அமையுமென தற்போது எண்ண ஆரம்பித்துள்ளனர். எனவே, தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்று மீண்டுமொரு பெரும்பான்மைக்குப் போகலாமென அவர்கள் நம்புகிறார்கள்.

அந்த அடிப்படையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி உடையுமென நம்பித்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் சிறிது உற்சாகமாகக் காணப்படுகிறார்கள். சிறீலங்கா சுதந்திரக் கட்சி உடையாதெனத் தெரிந்தால் அவர்கள் தேர்தலுக்கே வரமாட்டார்கள். எனவே, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் எடுக்கும் முடிவே இனப்பிரச்சினைக்கான தீர்வினை நோக்கிய அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதாக அமையும் எனவும் பிரபல சமூக அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் தெரிவித்துள்ளார். (அ)

## இன்று நாளும் கோளும்

13.11.2017 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 27 ஆம் நாள்

| | | |
|---|---|---|
| நவமி பி.ப. 05.08 மணி வரை | மகம் பி.இ. 04.08 மணி வரை | சித்தயோகம் |
| இராகுகாலம் 04.30 - 06.00 | சுபநேரம் 07.45 - 08.45 | எமகண்டம் 12.00 - 01.30 |

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேன்மை | வெற்றி | சுகம் | போட்டி | சுபம் | தனம் | வரவு | முயற்சி | ஓய்வு | கவலை | லாபம் | ஜெயம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு ஆளுநரை சந்தித்த இராஜதந்திரி



மட்டக்களப்பு,நவ.13

தென்னாபிரிக்கா உயர்ஸ்தானிகர் மாக்ஸ், கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாக மவை, கிழக்கு ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் சந்தித்தார்.

இந்தச்சந்திப்பின் போது, கிழக்கு மாகாணத்தில் போருக்குப் பின்னரான அபிவிருத்தி, தேசிய நல்லிணக்க விவகாரங்கள், கிழக்கு மாகாணத்தில் தென்னாபிரிக்காவின் முதலீட்டு முயற்சிகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

தேசிய நல்லிணக்கம் தொடர்பான தென்னாபிரிக்காவின் அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்து, இந்நாட்டின் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் அதிகாரப்பரவலாக்கல் முயற்சிகளை கட்டியெழுப்புவதற்கு தென்னாபிரிக்கா தன்னாலான முழு உதவிகளை வழங்குமென, உயர்ஸ்தானிகர் மாக்ஸ் இதன்போது தெரிவித்தார். (அ)



## குப்பையள்தான் குப்பையைக் குப்பையாப் போடுவினம்......

இப்ப இரண்டு நாளாப் பெய்த மழைக்கு எல்லா இடத்திலையும் வெள்ளம். றோட்டுகளும் உடைவும், சகதியுமாக் கிடக்கிது. பொழுது பட்ட நேரம். வெளியிலை போய் வாறதும் கஷ்டம்.

நேற்று ராத்திரி மழைக்கு வேளைக்குப் பசிக்கத் துவங்கி விட்டுது. இரவுச் சாப்பாட்டுக்கு என்ன எண்டு கேட்டன்? மழைக்கு விறகு நனைஞ்சு போச்சுது எண்டு சொல்லி, சமைக்கப் பஞ்சிப்பட்டினம். இந்த நேரத்திலை ஏன் உவையளைக் கரைச்சல் படுத்துவான் எண்டு சைக்கிளையும் எடுத்துக் கொண்டு பேக்கறிப் பக்கம் போனன்.

போகேக்கை ரோச்சு லைற்றை எடுத்துக் கொண்டு போக மறந்து போனன். றோட்டிலை சரியான இருட்டு. கொஞ்சத் தூரம் போகேக்கை தான் பாத்தன் சோமர் வீட்டுப் படலைக்குக் கிட்ட ஒரு சின்னக் கல்லுக் கும்பி மாதிரி ஒண்டு தெரிஞ்சிது. எட சண்டாலியள் இப்பிடிக் கொண்டு வந்து நடு றோட்டிலை கல்லைப் போட்டிட்டுப் போட்டாங்களே எண்டு கிட்டப் போய்ப் பாத்தால், அது கல்லுக் கும்பியில்லை. நாலைஞ்சு குப்பைச் சாக்குகள். பக்கத்து வெட்டைக் காணிக்கை ஆரோ போட்டது, மழைக்கு வெள்ளத்திலை மிதந்து வந்து றோட்டிலை நிக்கிது.

அப்பு சொல்லுற மாதிரி இதை ஆரிட்டைச் சொல்லி அழ? இருட்டுக்கை கண் விண் தெரியாமல் ஆரேன் வந்து உந்தக் குப்பைச் சாக்கோடை மோதினால், உடனை கையாலயத்தைத்தான் பாப்பினம். மெல்லச் சைக்கிளை விட்டிட்டு இறங்கி ஒண்டொண்டா இழுத்துக் கரையிலை போட்டன்.

எங்கடை ஊரிலை குப்பையைச் சாக்குக்கை கட்டி வைக்கிற அழுகல் பழக்கம் எப்ப வந்தது? வீசி இருக்கிற காலத்திலை எல்லாரும் தங்கடை தங்கடை குப்பையை தங்கடை வளவு வாய்க்கலுக்கையே வெட்டித் தாட்டினம். நிலத்துக்கு உரமுமாச்சு. ஊருலகமும் கிளீனாக் கிடந்திது. எப்ப டீசீ வந்துதோ? அப்ப ஆக்களுக்கு வேலை குருக்கிறுகும், வரி எடுக்கிறதுக்குமாக கழிவுகளைத் தாங்கள் எடுக்கிறம் எண்டு சொல்லி வெளிக்கிட்டு..... இப்ப குப்பைச் சாக்குகள் நடுத் தெருவிலை கிடந்து நாறுது.

குப்பையளைக் கட்டிச் சாக்குகளிலையும், வாளியிலையும் போட்டு வைக்கிறது கொழும்பு மாதிரி இடங்களுக்குச் சரி. இஞ்சைதானே வளவுகளும், தோட்டம் துரவுகளும் தாராளமாக் கிடக்கு. ஆக்களும் வீட்டிலை சும்மா நிக்கினம். அதைச் செய்தால் என்ன.

சரி பொலித்தீனையும், பிளாஸ்ரிக்கையும், உக்காத கழிவையும் தானே கட்டி வைக்கிறம் எண்ணுறியள். சரி உக்கிற கழிவை வீட்டிலை வெட்டித் தாட்டுப் போட்டு உக்காதது மாத்திரம் கட்டி வையுங்கோவன். பாளட்டுப் போவார், எல்லாத்தையும் ஒண்டாக் கட்டி றோட்டிலை போட, நாயும், பேயுமாச் சேந்து அதைக் கடிச்சுக் கிழிச்சு றோட்டெல்லாம் இழுத்து போட்டிட்டுப் போக, அதைப் பாத்துச் சொல்லலாம் அந்த குப்பை போட்ட குப்பையள் அந்தக் கிழமை என்னத்தைச் செய்தவை, என்னத்தைச் சாப்பிட்டவை எண்டு. அவேன்ரை சரித்திரமே அந்தக் குப்பேக்கை கிடக்கும். உது வேணுமோ?

குப்பை வைக்கிறதைப் பாத்தால் அவையள் எவ்வளவு குப்பையானவை எண்டும் அவையளுக்கை உள்ள குப்பை என்னெண்டும் தெரியும்.

உதைப் பற்றிக் கேட்டால் "எங்களுக்கு நேரமில்லை" எண்டு சொல்லிறியள். ஆனால் மோட்டச் சைக்கிளிலை பிள்ளை குட்டியளை ஏத்திக் கொண்டு குறுக்கு மறுக்கும் திரியிறியள். தியேட்டரிலை மெரிசல் பாக்க நெரிசலாக் கிடக்கு. றியோ நிரம்பிக் கிடக்கு.

உதிலை இருந்து என்ன விளங்கிது? நல்லதைச் செய்ய மாட்டம். அதைச் செய்ய எங்களுக்கு விருப்பமுமில்லை, பழக்கமுமில்லை. நாங்களும் கெட்டுப் பிள்ளை குட்டியளுக்கும் அந்த அழுகல் பழக்கங்களைப் பழக்குவம், எங்களுக்குக் குனிஞ்சு நிமிரேலாமல் கிடக்கு எண்டு சாட்டுச் சொல்லுறமாதிரித்தானே, அதின்ரை விளக்கம்?

நான் இருந்திட்டு நினைக்கிறது "ஏன் அந்தக் கடவுள் நுளம்பைப் படைச்சவரெண்டு. நுளம்பு டெங்குவைப் பரப்ப..... டெங்குவை ஒழிக்க எண்டு எம்.ஓ.எச் உங்களைத் துரத்த.....அப்ப நீங்கள் குப்பை, கூழங்களை வடிவா வைப்பியள் எண்டு....? இது உண்மையோ? எல்லாம் வில்லங்கந்தான்!

- வில்லங்கம் விநாசி

## 6 பவுண் தங்க நகையை அபேஸ் செய்த பெண்

திருகோணமலை. நவ.13

மூதூர் - தோப்பூர் இக்பால் நகர் பகுதியிலுள்ள வீடொன்றினுள் முருங்கைக் காய் வாங்குவது போல பாசாங்கு செய்து, பெண் ஆறு பவுண் தங்க நகைகளை 'அபேஸ்' செய்த பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த பெண் முருங்கைக் காய் வாங்குவதற்காக வீடொன்றுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில், தான் பக்கத்து வீட்டுக்குச் செல்லப் போகின்றேன் எனக் குறித்த பெண்ணிடம் கூறிவிட்டு, வீட்டு உரிமையாளர்புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தினை பயன்படுத்திய பெண் திறந்திருந்த வீட்டினுள் இலாவகமாக உட்புகுந்து நகைகளைத் திருடியுள்ளார்.

வெளியே சென்றிருந்த வீட்டின் உரிமையாளர் திரும்பி வந்தபோது, வீட்டினுள் யாரோ உள் நுழைந்தது போன்று தென்பட்டுள்ளது.

உடனே அவர் நகை வைத்திருந்த பெட்டியினைப் பார்த்த போது நகை திருடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

முருங்கைக் காய் வாங்க வந்த பெண்ணின் மீது சந்தேகம் கொண்ட அவர், மூதூர்ப் பொலிஸில் முறையிட்டார். சந்தேகநபரான பெண்ணின் வீட்டுக்குப் பொலிஸார் சென்று விசாரணைகளைச் செய்துள்ளனர். இதனையடுத்து, குற்றத்தை ஒப்புக் கொண்ட பெண், நகைகளையும் திருப்பிக் கொடுத்துள்ளார்.

பின்னர் அவரைக் கைதுசெய்த பொலிஸார் தடுப்புக் காவலில் வைத்துள்ளதுடன், மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## மரக்கறி இறக்குமதியை உடனே நிறுத்துங்கள்

கொழும்பு, நவ.13

வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய் ஆகியவற்றை இறக்குமதி செய்வதை நிறுத்துமாறு, மெனிங் சந்தை வியாபாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த உற்பத்திகள் உள்நாட்டில் கிடைக்கும் நிலையில், அவற்றை இறக்குமதி செய்கின்றமையினால், பல சிக்கல்களுக்கு முகம் கொடுப்பதாகவும் அந்தச் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதனால், அரசாங்கம் இவ்விடயம் தொடர்பில் உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இல்லாவிடின் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகவும் அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.(அ)

## நந்திக்கடல் நீர் பெருங்கடலுக்குள்!



முல்லைத்தீவு, நவ.13

நந்திக்கடல் நீர் ஏரியினை பெருங்கடலுடன் இணைக்கும் செயற்றிட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பெரும்போக விவசாயிகளின் நன்மை கருதி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் சமாசங்களின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக நிலவி வரும் மழையுடனான காலநிலை காரணமாக நந்திக்கடல் வாவியின் நீர்மட்டம் உயர்வடைந்து காணப்பட்டது.

இதன்காரணமாக குறித்த வாவியை அண்மித்த சுமார் 500 ஏக்கர் பெரும்போக நெற்செய்கைகள் பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் நந்திக் கடல் நீரை பெருங்கடலுடன் இணைக்குமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில், கடற்றொழில் சமாசங்களும், விவசாயிகளும் இணைந்து குறித்த நடவடிக்கையை நேற்று மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப் பெரிய வாவியாகிய நந்திக்கடல் வாவி இந்த வருடத்தில் இதற்கு முன்னரான பகுதிகளில் ஏற்பட்ட வறட்சி நிலை காரணமாக நீர்வற்றிச் சேற்று நிலமாகக் காணப்பட்டது. எனினும், முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்பொழுது போதியளவு மழை வீழ்ச்சி பதிவாகாத நிலையிலும், இவ்வாறு வாவி வெட்டப்பட்டமைக்கு குறித்த வாவியை ஆழப்படுத்தாமையே காரணம் என அப்பகுதி விவசாயிகளும், மீனவர்களும் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ)

## கொய்யாப்பழ ஆசை பறித்தது உயிரை!

### 6 வயதுச் சிறுவன் அநியாயச் சாவு



கொழும்பு, நவ.13

திம்புள்ளை, போகாவத்தைத் தோட்டத்தில் கொய்யாப்பழம் பறிக்கச் சென்ற 6 வயதுச் சிறுவன், அடுத்த நாள் காலை ஆறு ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

போகாவத்தை தோட்டத்தைச் சேர்ந்த, தரம் ஒன்றில் கல்வி பயிலும் ஆறு வயதுடைய ராஜேந்திரகுமார் அஸ்வின் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவர்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணிமுதலில் இருந்து சிறுவனை வீட்டில் காணாததால் உறவினர்களும், தோட்ட மக்களும் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது குறித்த சிறுவன் வீட்டின் அருகில் உள்ள போகாவத்தை ஓயாவில் சடலமாக மிதப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அதனை அடுத்து சடலத்தை மீட்ட பொலிஸார், கொய்யாப்பழம் பறிக்கச் சென்றபோது சிறுவன் தவறி ஆற்றில் விழுந்திருக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்தில் மைத்திரி



கொழும்பு, நவ.13

கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்ற தேசிய நீரிழிவு தின நடைப்பயணத்தின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறிது நேரம் மரம் ஒன்றில் ஓய்வாக அமர்ந்து மக்களுடன் கலந்துரையாடியுனார். ஜனாதிபதியின் இந்த எளிமை அங்கு நின்ற மக்களை வெகுவாகக் கவர்ந்ததுடன், அவருடன் பொதுமக்கள் செல்பியும் எடுத்துக் கொண்டனர். (அ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**13.11.1993**

யாழ்ப்பாணம் புனித ஜேம்ஸ் தேவாலயத்தின் மீது இலங்கை விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் வணக்கத்தில் ஈடுபட்டிருந்த 9 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

# காளான் சமைத்து உண்ட மூவர் மருத்துவமனையில்

காளான் சமைத்து உண்ட மூவர் அதனால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பதுளை கந்தகெட்டிய கிராமத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களாவர்.

காட்டுப் பகுதியில் முளைத்திருந்த காளான் ஒன்றைப் பிடுங்கிச் சென்று மதிய உணவுக்காக சமைத்துச் சாப்பிட்டுள்ளனர்.

சாப்பிட்ட சிறிது நேரத்தில் வாந்தி, இரத்த வாந்தி எடுத்துள்ளனர். இதையடுத்து அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். உணவு விஷமானதாலேயே இந்தப் பாதிப்பு ஏற்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# எனக்கு அதிகாரம் எதுவுமில்லை அதற்காக பதவி விலகமாட்டேன்

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதகிருஷ்ணன்



“எனக்கு எந்த அதிகாரத்தையும் அரசாங்கம் வழங்கவில்லை. இது தொடர்பில் ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் முறையிட்டிருக்கிறேன். ஆனால் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. அதற்காக பதவியை விட்டு விலகிச் செல்லமாட்டேன். பதவியில் இருந்துகொண்டே போராடுவேன்.”

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதகிருஷ்ணன்.

கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நேற்று நடந்த அழகுக் கலை நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டபின் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர நாமும் பங்களிப்பு வழங்கியிருந்தோம். எமக்கு இராஜாங்க அமைச்சை வழங்கினர். இதனைக் கொண்டு எமது மக்களுக்கு எதையும் செய்ய முடியாதுள்ளது. அதிகாரம் எதுவும் இந்தப் பதவியில் இல்லை. ஏனைய அமைச்சர்களுக்கும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இது குறித்து ஜனாதிபதி, பிரதமருக்கு முறையிட்டுள்ளேன். அவர்கள் இதுவரை இதற்கான தீர்வைத் தரவில்லை.

எனக்கும் கொள்கைகள் இருக்கிறது. அதிகாரம் இல்லை என்பதற்காக பதவியை விட்டு விலகப் போவதில்லை. பதவியில் இருந்துகொண்டே அதிகாரத்துக்காகப் போராடுவேன். முன்னர் என்றால் பதவியில் இருந்துகொண்டே விமர்சிக்க முடியாது”- என்றார்.

# அனுமதியின்றி மதுபானம் கொண்டு சென்றவர்கள் கைது



அரசாங்க அனுமதிப் பத்திரம் இன்றி 50 மதுபானப் போத்தல்களை முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்றவர்களை லிந்துலை பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

ரதல்ல பகுதியிலிருந்து நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியினூடாக மட்டுக்கலை பகுதிக்கு இரவு 10.30 மணியளவில் கொண்டு செல்லப்பட்ட போதே இந்த மதுபான போத்தல்களை பொலிஸார் கைப்பற்றினர். இதன்போது மூன்று சந்தேக நபர்களும் முச்சக்கரவண்டியுடன் கைது செய்யப்பட்டதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள அவர்களை எதிர்வரும் தினங்களில் நுவரெலியா நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# வவுனியாவில் நூதன திருமணம்! மணமக்களுக்கு பரிசாக பாம்பு



வவுனியா கிராமம் ஒன்றில் வித்தியாசமான முறையில் திருமணம் ஒன்று நேற்று நடைபெற்றது.

மல்காந்தி என்ற 19 பெண்ணுக்கும் அரவிந்த குமார என்ற 20 வயது இளைஞருக்கும் தெலுங்கு சம்பிரதாய முறைப்படி இந்தத் திருமணம் நடைபெற்றுள்ளது

பெரியோர்கள் முன்னிலையில் ரபான் அடித்து, பாசி மாலை அணிந்து, மோதிரம் மாற்றி இருவரும் திருமண பந்தத்தில் இணைந்தனர்.

வவுனியா, நொச்சிகுளம் கிராமத்தில் தெலுங்கு வம்சாவளி சமுதாயத்தினர் சுமார் 54 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவர்களின் மூதாதையர் குரங்கு வித்தை, பாம்பு வித்தை தொழில்களை முன்னர் செய்து வந்தனர்.

தற்போது பயிர்ச் செய்கை, மீன் பிடித்தல், வியாபார தொழில்களை இவர்கள் செய்து வருகின்றனர். இவர்களுக்கு திருமணப் பரிசாக மணமகளின் தந்தை இருவருக்கும் பாம்புப் பெட்டியில் பாம்பையும், மகுடியையும் வழங்கினார். (ச)

# பியர் வரி குறைப்பு பிடிக்கவேயில்லை

## மைத்திரி அதிருப்தி




கொழும்பு, நவ.13

பியர் வகைகளுக்கான வரி குறைக்கப்பட்டமைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிருப்தி வெளியிட்டுள்ளார். “கான்களில்“ அடைக்கப்பட்ட ஒரு லீற்றர் பியருக்கான வரி 100 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு ஜனாதிபதியும் சில அமைச்சர்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். வரி குறைப்புத் தொடர்பில் அமைச்சரவையில் கடுமையான விமர்சனங்கள் எழுப்பப்பட்டுள்ளன. குறிப்பாக சம்பிக்க ரணவக்க மற்றும் ராஜித சேனாரட்ன ஆகிய அமைச்சர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சட்டவிரோத மதுபானப் பயன்பாட்டைத் தடுக்கவே இவ்வாறு வரி குறைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எனினும், இந்த வாதத்தை அமைச்சர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என அமைச்சரவை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## மங்களவின் பசுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

## கூட்டமைப்புடன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அடிப்படைக் கொள்கையில் இருந்து நாங்கள் இறங்கப்போவதில்லை என்பதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவம் வெளிப்படுத்த வேண்டும். அதேவேளை கூட்டமைப்பில் இருந்து வெளியே செல்வது நல்ல விடயமல்ல. அதனுடன் சேர்ந்து பயணிப்பதே நல்லது."

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் யாழ்ப்பாணம் பொது நூல் நிலையத்தில் இடம்பெற்றது. அந்தக் கூட்டம் நிறைவடைந்து வெளியேறியபோது, முதலமைச்சரிடம் செய்தியாளர்கள் கேள்விகளை எழுப்பினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நாங்கள் சேர்ந்து அரைகுறைத் தீர்வைப் பெற்றுக் கொண்டால் வருங்கால சமுதாயத்தினர் பாதிக்கப்படுவர்.

இப்பொழுதே வடக்கு மாகாணத்தில் மக்கள் செறிவை மாற்ற பல விடயங்கள் நடைபெறுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் குறைபாடுடைய குறைந்த தீர்வை ஏற்றுக்கொண்டால் எதிர்காலத்தில் மிகப் பாரதுரமான விளைவுகள் ஏற்படும்.

உள்ளூராட்சித் தேர்தலில் நல்ல தகமையுடைய வர்களைக் கொண்டுவரப்பட வேண்டும். அதற்காக கட்சிக்காக உழைப்பவர்கள் தங்களுடன் சேர்ந்திருப்பவர்களை மாத்திரம் சேர்க்காமல், அந்தந்தத் துறைகளில் தகுதியுடையவர்களைச் சேர்க்க வேண்டும்.

என்னனென்ன குணாம்சம் ஒரு தவிசாளருக்கு இருக்க வேண்டுமோ அவற்றை கொண்டவரையே அந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டும். அதனைவிடுத்து கட்சி ரீதியாக தமக்குத் தேவையானவர்களை மாத்திரம் எடுக்க கூடாது.

இளைஞர், யுவதிகளில் படித்த பட்டதாரிகளை வேட்பாளர்கள் பட்டியலுக்குள் உள்வாங்க வேண்டும்.

சில பேச்சாளர்கள் பேசும் போது, 'தகுதியுடைவர்களை மாத்திரம் ஏற்றுக்கொள்ளாது தமிழ் மக்களின் அடிப்படை உரித்துகளை ஏற்றுக்கொண்டவர்களை தேர்தலில் நிறுத்த வேண்டும்' என்று தெரிவிக்கின்றார்கள்.

எந்தக் கட்சி தேர்தலில் நின்றாலும் தகுதி உடையவர்கள் உள்வாங்கப்பட வேண்டும்.

கூட்டமைப்பில் இருந்து வெளியே செல்வது நல்ல விடயமல்ல. அதனுடன் சேர்ந்து பயணிப்பதே நல்லது.

தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சி ரீதியான எந்த நடவடிக்கையும் எடுக்க போவதில்லை. மக்கள் இயக்கமாகவே அது தொடர்ந்து செயற்படும்- என்றார். (அ)

## ஆதாரமற்ற... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளது.

"11.11.2017 அன்று தொடர்பாக பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் அதன் நிர்வாகத்துக்கும் தடை என உண்மைக்குப் புறம்பான செய்தி தங்களுடைய பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. இது தவறானது.

இது தொடர்பான உண்மைத்தன்மை யாதெனில், இத்தடை சம்பந்தமான அறிவித்தல் வடமராட்சி உதைபந்தாட்டச் சங்கத்தால் இதுவரை எமது கழகத்துக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. ஆனால் லீக்கிலுள்ள ஒருசிலர் இவ்வாறு கதைப்பதற்காக தங்கள் மூலமாகவே அறிந்திருந்தோம்.

அவ்வாறு லீக்கினால் எமது கழகத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தால், ஏன் எமது அணியிலுள்ள ஒரு சிலருடைய புகைப்படத்தை பிரசுரித்துள்ளமை எமது வீரர்களை அவமதிக்கும் செயலாகவே கருதுகிறோம்.

இதேவேளை தங்கள் செய்தியின் இறுதியில் "இத் தொடர்பில் பங்கேற்க வேண்டாம்' எனத் தமக்கு எவ்வித உத்தியோகபூர்வ, அறிவிப்பும் விடுக்கவில்லை என பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது" என்ற தகவல் உண்மைக்குப் புறம்பானது. அவ்வாறு செய்தியாளர்கள் எவரும் எம்முடன் தொடர்பு கொள்ளவில்லை என்பதனை தங்களுக்கும் அறியதருகின்றோம். இச்செய்தி அனுப்பிய செய்தியாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேற்படி மைலோ சுற்றுப் போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலருடாக யாழ். மாவட்ட அரச அதிபரின் வேண்டுகோளின் அடிப்படையிலேயே எமது அணி, அப்போட்டியில் வடமராட்சி உதைபந்தாட்டச் சங்க நிர்வாகத்துக்கு தெரிவித்த பின்னரே பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது." என்று அந்த மறுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு:

1. குறித்த செய்தியில் பொம்மர்ஸ் அணி வீரர்களின் புகைப்படம் பயன்படுத்தப்பட்டமை எதிரொலி தவறெனை ஏற்றுக் கொள்வதுடன், வருத்தத்தையும் தெரிவிக்கின்றது.

2. பொம்மர்ஸ் அணிக்குத் தடை விதிப்பது குறித்து 09.11.2017 அன்று வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அடிப்படையாக வைத்தே இந்தச் செய்தியை செய்தியாளர் அனுப்பி வைத்துள்ளார். இதனை வடமராட்சி உதைபந்தாட்ட லீக் உறுப்பினர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். ஆயினும் இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனவும், பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு எழுத்து மூலமாக இது குறித்து எதுவும் தெரியப்படுத்தவில்லை எனவும் வடமராட்சி லீக் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.(அ)

## தமிழ்த் தேசிய முன்னணி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்கள் ஆகியவையும் பொது இணக்கப்பாட்டுடன் பங்குபற்றவேண்டும்."

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் நேற்றுத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் யாழ்ப்பாணம் பொது நூல் நிலையத்தில் நேற்று நடைபெற்று முடிந்த பின்னர், நடத்திய ஊடகச் சந்திப்பிலேயே இந்தத் தகவலை அவரும், சுரேஷ் பிரேமச்சந்திரனும் வெளியிட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளக முரண்பாடுகள் காரணமாக ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி, தமிழரசுக் கட்சியோடு இணைந்து செயலாற்ற முடியாது எனத் தெரிவித்ததையடுத்து, புதிய கூட்டணி ஒன்று உருவாகும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் அந்த ஊகத்தை உறுதி செய்வதைப் போல, நேற்றைய தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தின் பின்னர் கஜேந்திரகுமாரும்,சுரேஷ் பிரேமச்சந்திரனும் புதிய கூட்டணி உருவாவதை உறுதி செய்தனர்.

"தமிழ் மக்கள் நடுத்தெருவுக்குத் வந்துள்ள நிலையில் அவர்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்த கூட்டமைப்பினர், தமது அரசியல் மோசடிகளை மறைக்கத் தாமும் திருந்திவிட்டதாக முன்வரக் கூடிய நிலமை உருவாகலாம். அவ்வாறு மாறி வருபவர்களுடன் இணைந்து நாம் எமது பணியைச் செய்ய முடியாது" என்று கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

"தமிழரசுக் கட்சி மக்களின் ஆணையை முழுமையாக உதாசீனம் செய்துவிட்டது. அதனால் புதிய முன்னணியின் அவசியத்தை ஈ.பி.ஆர்.எல்.எப் கடந்த சில வருடங்களாக வலியுறுத்தி வந்தது. அதனை இன்று அனைவரும் புரிந்து கொண்டுள்ளனர். இனியும் நாம் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதாயின், வீட்டுச் சின்னத்தை விட்டு பொதுச்சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட முன்வர வேண்டும். அவ்வாறில்லாத பட்சத்தில் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்திருக்க முடியாது. புதிய கூட்டணி தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை தமிழ் மக்கள் பேரவை விரைவில் அறிவிக்கும்"

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.(அ)

## கருணாவின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது வவுனியா புகையிரத நிலைய வீதியில் குறித்த வாகனம் பயணித்த போது மூன்று வாகனங்களில் வந்த குழுவினர் அவரது நண்பரை வழிமறித்து துப்பாக்கி முனையில் கடத்த முற்பட்டுள்ளனர். அப்போது, பின்னால் இன்னொரு வாகனத்தில் வந்த பொன்னுத்துரை அரவிந்தனும் அவரின் இன்னொரு நண்பரும், அயலில் நின்ற இளைஞர்களின் உதவியுடன் துப்பாக்கி வைத்திருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். அத்துடன், 3 சந்தேகநபர்களை மடக்கி பிடித்துள்ளதுடன், அவர்கள் பயணித்த கார் ஒன்றினையும் கைப்பற்றியுள்ளனர். இதன் போது கடத்தல் முயற்சியில் ஈடுபட முனைந்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் பிடிக்கப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்து, மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## மாவீரர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் எனப் பலரும் இணைந்து சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலத்தில் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நினைவேந்தல் ஏற்பாடாகி இருந்தது. ஆனால் இந்த முறை இதுவரைக்கும் எந்த வித அச்சுறுத்தல்களும் இல்லாத நிலையில் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் விடுதலைப்புலிகளின் காலத்தில் நடைபெற்றதைப் போல் இம் முறை கிளிநொச்சியில் மிகவும் எழுச்சியுடன் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

## வடக்கு-கிழக்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் காங்கிரஸின் தலைவருமான பிரபா கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கான வீட்டுத்திட்டத்துக்கு 75 கோடி ரூபா நிதி வரவு - செலவு திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 75 கோடி ரூபாவில் 50 ஆயிரம் வீடுகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் வெறும் 15 ஆயிரம் ரூபாவே ஒரு வீட்டினைக் கட்டி முடிக்க வழங்கப் போகிறார்கள். 15 ஆயிரம் ரூபாவுக்கு எப்படி ஒரு வீட்டை அமைக்க முடியும்? தமிழ் மக்களை நன்றாகவே இந்த அரசு ஏமாற்றி இருக்கிறது" என்று அவர் தெரிவித்தார். (அ)

## ரயிலுடன் மோதி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் மீசாலையில் இடம்பெற்றது. கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியை சேர்ந்த தெய்வேந்திரம் ஞானயுகன் ( வயது - 38) என்ற சாரதியே இந்த விபத்தில் உயிரிழந்தவராவார்.

ரயில் வருவதை அவதானிக்காத குறித்த நபர், மோட்டார் சைக்கிளில் கடவையைக் கடக்க முற்பட்ட போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(அ)

## ஒற்றையாட்சிக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா வன்னி இன் விடுதியில் நடைபெற்றது.

காலை 10 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தவை வருமாறு:

### ஒற்றையாட்சிக்கு இணங்கவில்லை

அரசியலமைப்பு நடவடிக்கைக் குழுவால் முன்வைக்கப்பட்ட இடைக்கால அறிக்கை சம்பந்தமாக விவாதம் அரசியலமைப்புப் பேரவையில் நடந்ததன் பின்னணியில், அந்த விடயங்கள் தொடர்பாகவும் காலையில் நீண்டநேரம் நாங்கள் பேசினோம். அதில் சொல்லப்பட்ட விடயங்கள் எவ்வகையான விடயங்கள் என்பதைப் பற்றி நாங்கள் கலந்துபேசியிருந்தோம். இது இடைக்காலத்திலே வெளிவந்திருக்கும் ஓர் அறிக்கை. அது வரைபு அல்ல இறுதி அறிக்கையுமல்ல. இடைக்காலத்தில் வந்துள்ள அறிக்கை. அது சம்பந்தமாக சில முன்மொழிவுகள் நாட்டின் சுபாவத்தைப் பற்றி, ஆட்சி முறையைப் பற்றி, அதிகாரப் பகிர்வைப் பற்றி இதில் சொல்லப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு காணவே அரசாங்கம் விரும்பிய போதும் நாம் அதற்கு இணங்கவில்லை. இதனுடன், வேறு சில விடயங்கள் இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கிறது என்பது இந்த அறிக்கையிலே வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த இடைக்கால அறிக்கைக்குப் பிறகு வருகின்ற வழிநடத்தல் குழுவிலே இன்னமும் இணங்காமல் இருக்கின்ற அல்லது இணக்கம் காணப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமாகவும் கட்சியின் உறுப்பினர்கள் வழிநடத்தல் குழுவிலே என்ன மாதிரியாக அந்த விடயங்களைக் கையாளவேண்டும் என்ற விடயங்கள் முன்வைக்கபட்டிருக்கின்றன.

### உள்ளூராட்சித் தேர்தல் எதிர்கொள்ள ஆயத்தம்

பிற்பகல் நடந்த கூட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் குறித்தும், புதிய தேர்தல் முறைமை தொடர்பிலும் அதிகம் பேசினோம். புதிய தேர்தல் முறை தொடர்பில் பல தெளிவுபடுத்தல்கள் அவசியப்பட்டது. ஏற்கனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் மூன்று யாழ்ப்பாணத்தில் சந்தித்து சில முன் நடவடிக்கைகளை எடுத்திருந்தோம்.

இதைத் தொடர்ந்து மாவட்ட மட்டங்களிலே சில சந்திப்புக்களை நடத்தி நாங்கள் எவ்விதம் தேர்தலை எதிர்கொள்வது என்ற முடிவுகளை எடுக்க வேண்டி உள்ளது. இது தொடர்பில் ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் அந்த மாவட்டத்தினுடைய சூழ்நிலையை அனுசரித்து பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு இது சம்பந்தமான முடிவுகளை வரும் காலத்தில் எடுக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது.

### வரவு - செலவுத் திட்டத்தில் எமது யோசனைக்கும் இடம்

2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க முன்னர், நிதி அமைச்சர் எங்களோடு கலந்து பேசினார். வடக்கு - கிழக்கில் நல்லிணக்கத்திற்கான நாடாளுமன்ற மேற்பார்வை குழுவின் தலைவராக மாவை. சேனாதிராஜா இயங்குகிறார். அவர் அவர்களுடன் தொடர்ச்சியாகப் பேசி வருகிறார். இதைவிட நிதி அமைச்சரை நானும், தலைவர் சம்பந்தனும் சந்தித்து, வரவு செலவு திட்ட யோசனைகள் குறித்துப் பேசியிருந்தோம்.

நாங்கள் முன்வைத்திருகின்ற அனேகமான யோசனைகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. 50,000 கல்வீடு அமைப்பதற்கு நிதி உடனடியாக ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னாள் போராளிகளுக்கு வேலை வாய்ப்பு சம்பந்தமாக இரண்டு முக்கியமான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும், மாற்றுதிறனுள்ள பெண்களுக்கும்முக்கியத்துவம்கொடுக்கப்பட்டுள்ளது. நாம் சொன்ன விடயங்களுக்கான நிதி ஒதுக்கீடு பெரியளவில் இல்லா விட்டாலும் நல்லிணக்கத்திற்கான பார்வையோடு யோசித்து பல முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன.

### காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் விரைவில்

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை இயக்க 140 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஜனவரி மாதத்திலிருந்து அதற்கான நடைமுறைகள் ஆரம்பமாகும். அப்படியான ஒரு அலுவலகம் சரியான முறையிலே இயங்குவதற்கு தேவையானளவு பணம் இதில் அடங்குகின்றது. இதை நாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.

இப்போது அலுவலகத்துக்கான 7 ஆணையாளர்களை நியமிக்கும் விடயத்தை அரசியலமைப்பு அவை நடவடிக்கை எடுத்துள்ளது. பலர் விண்ணப்பித்திருக்கின்றார்கள். வெகு விரைவாக இந்த நியமனங்கள் இடம்பெறும். பணமும் பெருமளவில் ஒதுக்கப்படிருப்பதால் வெகு விரைவாக நடக்கும் எனக் கருதுகிறேன். - என்றார்.

## ஈ.பி.ஆர்.எல்.எவ்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர் சந்திப்பில் சம்பந்தனும் பங்கேற்றிருந்தார்.

கூட்டமைப்பில் இருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். விலகியது குறித்து செய்தியாளர்கள் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆவது நாளும் தொடரும் வேட்டை!

சென்னை, நவ.13

4ஆவது நாளாக நேற்றும், தமிழகத்தில் தினகரன் - சசிகலா குடும்ப உறவினர் வீடுகள், நிறுவனங்கள் என்பவற்றைக் குறிவைத்து வருமானவரிச்சோதனை நடைபெற்றது.

சசிகலா குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் சென்னை உட்பட பல்வேறு நகரங்களில் மொத்தம் 187 இடங்களில் வருமானவரித்துறையினர் கடந்த 3 நாட்களாக சோதனை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் 4 ஆவது நாளாக நேற்றும் சோதனை தொடர்ந்தது.

ஜெயா டி.வி. அலுவலகம், நமது எம்.ஜி.ஆர். அலுவலகம், மிடாஸ் மதுபான ஆலை, உள்ளிட்ட 30 இடங்களில் சோதனை நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை நடந்த சோதனைகளில் பல கிலோக் கணக்கில் தங்க நகைகளும், பல கோடி ரூபாய் மதிப்புள்ள ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் அதிகாரிகள் நடத்திய சோதனையில் ஜெயா டி.வி., சி.இ.ஒ., விவேக் நிர்வகித்து வந்த 100க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகளை அதிகாரிகள் முடக்கியுள்ளனர்.

அந்த வங்கிக் கணக்குகள் அனைத்தும் 20 க்கும் மேற்பட்ட போலி நிறுவனங்களின் பெயர்களில் உள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும் இந்த வங்கிக் கணக்குகளில் பண மதிப்பிழப்புக்குப் பின்பு பல கோடி ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (இ)



# அறத்துக்கு பாராட்டு

சென்னை, நவ.13

நடிகை நயன்தாரா நடிப்பில் சமீபத்தில் வெளியான 'அறம்' படம் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று வரும் நிலையில், நடிகர் உதயா அந்தப் படத்துக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கடிதம் எழுதி உள்ளார்.

"அறம்" திரைப்படம் பார்த்தேன். ஒரு நடிகனாக இல்லாமல் ஒரு ரசிகனாக என் ஆழ் மனதில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்திய அற்புதமான திரைக் காவியம். சமூக விழிப்புணர்வோடு மக்களுக்கு மக்கள் தான் அரசாங்கம் என்று ஆணித்தரமாக நிரூபித்த படம். அரசாங்கம் மேல் நோக்கி பார்க்க...கீழ் நோக்கி இருக்கும் மக்களின் உணர்வுகளை, வலிகளை கண்ணாடி போல் வெளிப்படுத்தியிருக்கும் சினிமா என்கிற ஆயுதம்...மீண்டும் தன்னைக் கூராக்கியிருக்கிறது. இதில் நயன்தாரா உட்பட அனைத்து கலைஞர்களும் நிஜமாக வாழ்ந்திருக்கிறார்கள். அனைத்து தொழில்நுட்ப கலைஞர்களும் தமிழ் சினிமாவை உலகத் தரத்துக்கு உயர்த்தியிருக்கிறார்கள்.

இத்திரைப்படத்தை துணிவோடு தயாரித்த தயாரிப்பாளருக்கும், திரைக்காட்சிகளை யதார்த்தமாகப் படைத்த இயக்குநருக்கும் மற்றும் ஒட்டுமொத்த படக்குழுவினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்." என்று அவர்அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ)

# மிகப்பெரிய வைரம் மீட்பு

சியோரா லியோன், நவ.13

மேற்கு ஆபிரிக்க நாடான சியோரா லியோனில் உள்ள சுரங்கத்திலிருந்து மிகப்பெரிய வைரக்கல் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தவைரக்கல்லின் எடை 476 கரட் ஆகும்.

உலகில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட மிகப் பெரிய வைரக்கற்களின் பட்டியலில் 29 ஆவது இடத்தில் இந்தப் புதிய வைரக்கல் இணைந்துள்ளது. எனினும் இதன் பெறுமதி இன்னும் உறுதி செய்யப்பட்வில்லை. சுமார் 8 மாதங்களுக்கு முன்னர் இதைவிடவும் பெரிய வைரக்கல் ஒன்று அந்த வட்டாரத்தில் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஐ.எஸ். அமைப்பை வேரறுப்போம்

## அமெரிக்கா-ரஷ்யா கூட்டு அறிவிப்பு



வோஷிங்டன், நவ.13

சிரியாவில் இருந்து ஐ.எஸ். தீவிரவாதிகள் அழிக்கப்படுவார்கள் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

வியட்நாமில் நடைபெற்ற , ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினும் பங்கேற்றனர்.

அப்போது இருவரும்பரஸ்பரம் கைகுலுக்கினர். அடிக்கடி நட்புடன் உரையாடினர். இந்த மாநாட்டின்போது சிரியா விவகாரம் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். இதன்போது, ஐ.எஸ். தீவிரவாதிகளை வேரறுக்க ரஷ்ய, அமெரிக்க அதிபர்கள் உறுதியெடுத்தனர். சிரியாவில் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ள ஐ.நா. உறுப்பு நாடுகள் தாராளமாக நிதியுதவி அளிக்க வேண்டும் என்று இரு தலைவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். சிரியப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண முடியாது என்பதை ட்ரம்பும் புடினும் ஒப்புக் கொண்டனர்.

இவ்வாறு ரஷ்ய அதிபர் மாளிகை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை குறித்து அமெரிக்க தரப்பில் எவ்வித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. எனினும் வியட்நாம் மாநாட்டில் ட்ரம்பும் புடினும் நட்புடன் பேசியதை அமெரிக்க ஊடகங்கள் வரவேற்றுள்ளன.

இரு தலைவர்களும் கடந்த ஜூலையில் ஜேர்மனியில் நடந்த ஜி 20 மாநாட்டில் முதல்முறையாக சந்தித்துப் பேசினர். தற்போது வியட்நாமில் மீண்டும் சந்தித்துப் பேசியுள்ளனர். சிரியா, உக்ரைன் விவகாரங்களில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே மோதல் போக்கு நீடிக்கிறது. இதன் காரணமாக ரஷ்யா மீது அமெரிக்கா பல்வேறு பொருளாதார தடை

# மருத்துவமனையில் கெட்டிமேளம்



கொல்கத்தா, நவ.13

திருமணத்துக்கு முந்தைய நாள் இரவு மணமகளுக்குத் தீக்காயம் ஏற்பட்ட காரணத்தால், மருத்துவமனையில் வைத்து மணமகளுக்கு, மணமகன் தாலி கட்டியுள்ளார்.

சவுதியைச் சேர்ந்த ஷனாவாஸ் ஆலம் என்பவருக்கும், ஹைதராபாத்தை சேர்ந்த ஹெய்ரா ஜாவட் என்பவருக்கும் பெரியோர்களால் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

அதன்படி திருமணம் கொல்கத்தாவில் உள்ள மண்டபம் ஒன்றில் நடைபெறுவதாக இருந்தது. இந்த நிலையில் திருமணத்துக்கு முதல் நாள் இரவு வீட்டில் தீவிபத்து ஏற்பட்டதில் மணப்பெண் காயமடைந்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

குறித்த நாளில் திருமணம் நடைபெற வேண்டும் என்பதால் மருத்துவமனை நிர்வாகத்தின் உதவியோடு, அங்கிருந்த பொது அறையில் 15 உறவினர்கள் முன்னிலையில் இவர்களது திருமணம் நடைபெற்றுள்ளது. அதன்பின்னர், மணமகளை மருத்துவமனையில் இருக்கவைத்து விட்டு, மண்டபத்திற்கு சென்ற மணமகன் வந்திருந்த உறவினர் மற்றும் நண்பர்களுக்கு மட்டன் பிரியாணி விருந்து கொடுத்து வழியனுப்பி வைத்துள்ளார். (இ)

# 4 பேரின் சடலம் சுவிஸில் மீட்பு ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

சுவிஸ், நவ.13

சுவிட்ஸர்லாந்து நாட்டைச்சேர்ந்த மூவர் உட்பட 4 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சுவிட்ஸர்லாந்து நாட்டை சேர்ந்த ஒருவருக்கு அமெரிக்காவில் உள்ள உட்டா மாகாணத்தில் வேலை கிடைத்ததால் தனது இரண்டு பிள்ளைகள் மற்றும் மனைவியுடன் உட்டா மாகாணத்தில் வசித்து வந்துள்ள நிலையில், பொலிசாருக்கு கிடைத்த தகவலை தொடர்ந்து அவர்களது வீட்டுக்குச் சென்றுள்ளனர். அப்போது, வீட்டுக்குள் தந்தையும் இரண்டு பிள்ளைகளும் சடலமாக கிடந்துள்ளனர். அருகில் அவரது மனைவியின் சடலமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் தற்கொலை செய்துக்கொண்டனரா? அல்லது இதற்குப் பின்னணியில் குற்றச்செயல்கள் உள்ளதா? என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சான் பிரான்சிஸ்கோவில் உள்ள சுவிட்ஸர்லாந்து நாட்டுத் தூதரக உதவியுடன் அமெரிக்கப் பொலிஸார் இந்தச்சம்பவம் குறித்துக் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ)

# பிக்பாஸால் வந்த வாய்ப்பு



சென்னை, நவ.13

அபியும் நானும் படம் மூலம் தமிழுக்கு வந்தவர் கணேஷ் வெங்கட்ராம். அதன் பிறகு உன்னைப் போல் ஒருவன், கோ, தீயா வேலை செய்யணும் குமாரு, இவன் வேறமாதிரி, தொடரி உட்பட பல படங்களில் நடித்தார்.

இந்த நிலையில் விஜய் ரீ.வி நடத்திய பிக் பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சி அவருக்கு மை ஸ்டோரி என்ற மலையாளப் படத்தில் நடிக்க வாய்ப்பு வாங்கிக் கொடுத்திருக்கிறது. இதனால் 7 வருடங்களுக்கு பிறகு இப்போது மீண்டும் மலையாளத்தில் நடிக்கிறார் கணேஷ் வெங்கட்ராம்.

இந்தப் படத்தில் வாட்டசாட்டமான ஒரு இளைஞர் கதாபாத்திரம் உள்ளது. அதில் நடிக்க இன்னொரு மலையாள நடிகர் முடிவு செய்யப்பட்டிருந்தார். ஆனால் பிக்பாஸ் நிகழ்ச்சியின் மூலம் கணேஷ் வெங்கட்ராமைப் பற்றித் தெரிந்து கொண்ட இயக்குநர் ரோஷினி பணிக்கர், அதே மாதிரியான பாத்திரமே படத்திலும் என்பதால் கணேஷ் வெங்கட்ராமையே நடிக்க வைத்திருக்கிறார். (இ)

# நடிகர் தலைவரானால் நாட்டுக்கே பேரழிவு

பெங்களூர், நவ.13

நடிகர் பிரகாஷ்ராஜ் சமீப காலமாக பல சர்ச்சைகளில் சிக்கி வருகிறார். பண மதிப்பிழப்பு விவகாரத்தில் பிரதமர் மோடியை கடுமையாக விமர்சித்து அவர் தெரிவித்த கருத்துக்கள் சர்ச்சையாக்கப்பட்டன. இது தொடர்பாக அவர் மீது வழக்குகளும் தொடரப்பட்டன.

இந்நிலையில் நடிகர்கள் அரசியலுக்கு வருவது தொடர்பாக பிரகாஷ்ராஜிடம் பெங்களூரில் நேற்றுக் கருத்து கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர்,

"திரைப்பட நடிகர்கள் அரசியல் தலைவர்களானால் நாட்டுக்குப்பேரழிவு. நடிகர்கள் அரசியலுக்கு வருவதில் எனக்கு விருப்பமில்லை. நான் எந்த அரசியல் கட்சியிலும் சேரப் போவதில்லை. ரசிகர்களின் விருப்பங்களை மனதில் கொண்டு நடிகர்கள் பொறுப்புக்களை உணர்ந்து செயல்பட வேண்டும்" என்றார்.

ரஜினி, கமல் ஆகியோர் விரைவில் அரசியல் கட்சி தொடங்கப் போவதாகத் தகவல்கள் பரவி வருகின்றன. இதன் முன்னோட்டமாக கமல், பா.ஜ.க. அல்லாத மாநில முதல்வர்களை நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தி வருகிறார். இந்த நிலையில் நடிகர்கள் அரசியலுக்கு வருவது குறித்து பிரகாஷ்ராஜ் கூறி உள்ள கருத்து, புதிய சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

## கராத்தே சங்கத்தின் சிறந்த வீரராக ஹரிஸ்

இலங்கை கராத்தே சங்கம் நடத்திய கராத்தே போட்டியில் யாழ். வீரர் கி.ஹரிஷ் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப்போட்டி நேற்று முன்தினம் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் பருத்தித்துறை கராத்தே சங்கத்தைச் சேர்ந்த கி.ஹரிஷ் 8 வயதுப் பிரிவில் காட்டா போட்டியில் பங்கேற்றிருந்தார். (ச-55)






## மனோகரா பிறிமியர் லீக் எல்லே: மனோ சுப்பர் கிங்ஸ் சம்பியன்


மனோ ரைடர்ஸ் அணியை ஒரு ஓட்டத்தால் வென்று சம்பியனைக் கைப்பற்றியது மனோ சுப்பர் கிங்ஸ் அணி.

அல்வாய் மனோகரா விளையாட்டு கழகம் 90 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா பிறீமியர் லீக் கிண்ணத்துக்கான எல்லே போட்டியை நடத்தியது.

இதன் இறுதியாட்டம் நேற்று மனோகரா விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய மனோ ரைடர்ஸ் அணி 40 பந்துகளில் ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்றது. திவாகரன் அந்தப் புள்ளியை பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மனோ சுப்பர் கிங்ஸ் அணி 11 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்று சம்பியனானது. (ச -55)

## ஆஷஸ் தொடரில் காத்திருக்கிறது பயங்கரம்



ஆஷஸ் தொடரில் இங்கிலாந்துக்கு அணிக்கு பயங்கரம் காத்திருக்கிறது. - இவ்வாறு கூறியிருக்கிறார் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் இயன் சப்பல்.

பென் ஸ்டோக்ஸ் விவகாரம், வீரர்களின் காயங்கள் ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்போது வரும் ஆஷஸ் தொடர் இங்கிலாந்துக்கு சீரழிவை ஏற்படுத்தும்போல் தெரிகிறது. ஜோ றூட் மிக மிக வலுவான தலைவராக இருந்தால் மட்டுமே இத்தகைய சூழ்நிலைகளைச் சமாளிக்க முடியும்.

2002-2003 தொடரில் இந்தத் தொடர் போலவே அதீத நம்பிக்கையுடன் இங்கிலாந்து வந்தது. ஆனால் டேரன், பிளின்ரொப், சைமன் ஜோன்ஸ் காயமடைய இங்கிலாந்து பரிதாபத்துக்கு உரிய அணியாக மாறியது.

இதேபோன்ற நிலையிலேயே தற்போது இங்கிலாந்து உள்ளது. ஸ்ரோக்ஸ் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பின் காயமடைந்து விலகியுள்ளார். மொயின் அலி காயமடைந்துள்ளார். மொத்தத்தில் இங்கிலாந்துக்கு ஆஷஸில் பயங்கரம் காத்திருக்கிறது - என்றார். (ச)

## பாகிஸ்தான் – மே.இ.தீவுகள் தொடர்: பாதுகாப்பு அச்சத்தால் பின்செல்கிறது




பாதுகாப்பு அச்சத்தால் மேற்கிந்தியத் தீவுகள் அணி பாகிஸ்தான் செல்வதை பிற்போட்டுள்ளது.

இதனால் இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் அடுத்த வருடத்துக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்த ஆண்டின் இறுதியில் பாகிஸ்தானுக்கு சென்று 3 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடத் திட்டமிட்டிருந்தது.

மூன்று ஆட்டங்களையும் லாகூரில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆர்வம் காட்டியது. ஆனால் பாதுகாப்பு அச்சத்தால் பெரும்பாலான மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர்கள் பாகிஸ்தானுக்குச் செல்லத் தயங்குகின்றனர். இதையடுத்து இந்தத் தொடர் அடுத்த ஆண்டுக்குத் தள்ளி வைக்கப்பட்டது. (ச)




“எனக்கு எது சரியாகப் படுகிறதோ அதைத்தான் நான் செய்வேன். என் வழி எப்போதுமே தனிப்பட்டதாகவே இருக்கும்” என டோனி கூறியுள்ளார்.

துபாயில் தனது குளோபல் கிரிக்கெட் அக்கடமியைத் திறந்து வைத்து தன் கனவை நிறைவேற்றிய டோனி, தன் மீதான விமர்சனங்களுக்கு அவரது பாணியிலேயே கூலாகப் பதில் அளித்தார்.

அஜித் அகார்கர் உள்ளிட்டோர் டோனியின் துடுப்பாட்டம் குறித்து விமர்சனம் செய்தமை குறித்து அவர் கூறும்போது,

“அனைவருக்கும் கருத்துக் கூற உரிமையுள்ளது. அது மதிக்கப்பட வேண்டியது அவசியம். இந்தியக் கிரிக்கெட் அணியின் அங்கமாக இருப்பதே மிகப்பெரிய உத்வேகம். கடவுளின் வரப்பிரசாதம் இல்லாத வீரர்கள் கூட மிகத்தொலைவு வரை தங்கள் விளையாட்டில் சென்றுள்ளனர். காரணம் அவர்களுக்கு இந்திய அணி மீதும் கிரிக்கெட் மீதும் உள்ள விருப்பம். பயிற்சியாளர்கள் இதனைத்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

கிரிக்கெட் அக்கடமியைப் பொறுத்தவரை, நான் எப்போதுமே முடிவுகளை விட வழிமுறைகளையே பெரிதும் நம்புபவன். நான் ஒருபோதும் முடிவுகள் பற்றிக் கவலைப்பட்டதில்லை. நான் எது சரி என்று படுகிறதோ அதைத்தான் செய்து வந்துள்ளேன். அந்தச் சூழ்நிலையில் 10 ஓட்டங்கள் தேவையாக இருந்தாலும் 14 ஓட்டங்கள் தேவையாக இருந்தாலும், அல்லது 5 ஓட்டங்களே தேவையாக இருந்தாலும் எது சரியானதோ அதைத்தான் செய்வேன். நான் வழிமுறைகளிலேயே ஆழ்ந்து விடுவேன். முடிவுகள் பற்றிய சுமையை நான் சிந்திப்பதில்லை” என்றார்.

உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி
Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 13.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.